# மாகாண கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)
## மாதிரிப் பரீட்சை - 2017

| தரம் : 13 (2017) | கிறிஸ்தவம் - I | நேரம் :- 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

❖ **மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

**(01)** பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டதை அழைப்பது
(1) பிபிளுஸ் (2) செப்துவாஜின்ற் (3) வல்கேற்
(4) பைபிள் (5) தனக்

**(02)** இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான நெருங்கிய உறவின் கதை, மனித இயல்பு, இறைவனின் விருப்பம், மீட்பின் வழி பற்றிய உண்மைகள் உள்ளடக்கப்பட்ட நூற் தொகுப்பு
(1) வாய்மொழிப் பாரம்பரியம் (2) திருவிவிலியம் (3) விடுதலைப் பயணம்
(4) புராணக்கதை (5) இணைச்சட்டம்

**(03)** திருவிவிலியம் பல நூல்களை உள்ளடக்கியிருப்பினும் அது ஒரு நூலாகக் கருதப்படக் காரணம்
(1) அது ஒரு நூலை விட நூலகமாக இருப்பதால்
(2) அதில் பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை என்னும் இரு பகுதிகள் அடங்கியிருப்பதால்
(3) அதில் இஸ்ராயேல் வரலாறு வெளிப்படுத்தப்படுவதால்
(4) அதன் கருப்பொருள் ஒன்றே
(5) அது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால்

**(04)** வாய்மொழி இறை ஏவுதலைக் கொண்டவர்கள்
(1) நீதித்தலைவர்கள், திருத்தூதர்கள் (2) அரசர்கள், குலமுதுவர்கள்
(3) குலமுதுவர்கள், நீதித்தலைவர்கள் (4) திருத்தூதர்கள், திருச்சபை
(5) இறைவாக்கினர்கள், திருத்தூதர்கள்

**(05)** இஸ்ராயேலருக்கு இராணுவத் தளமாக பயன்பட்ட சமவெளி
(1) செப்பலோ சமவெளி (2) சரோன் சமவெளி (3) எஸ்திரலோன் சமவெளி
(4) பெலிஸ்தியச் சமவெளி (5) கடற்கரைப் பகுதி

**(06)** "அஞ்சாதீர்கள் நிலைகுலையாதீர்கள் இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள்" என இஸ்ராயேலருக்கு கூறியவர்
(1) ஆபிரகாம் (2) எசாயா (3) மோசே
(4) ஆரோன் (5) யோசுவா

**(07)** யோசுவாவின் தலைமைத்துவத்தின் கீழ் இஸ்ராயேலர் கைப்பற்றியது
(1) கலிலேயாவை (2) எருசலேமை (3) பலஸ்தீனாவை
(4) எரிக்கோவை (5) சமாரியாவை

**(08)** தந்தையிலிருந்து மகன் ஆட்சிக்கு வரும் பரம்பரை உருவாகியது

(1) சாலமோனின் ஆட்சிக்குப் பின் (2) மோசேயின் ஆட்சிக்குப் பின் (3) சாமுவேலின் ஆட்சியின் பின் (4) சவுலின் ஆட்சிக்குப் பின் (5) தாவீதின் ஆட்சிக்குப் பின்

**(09)** இஸ்ராயேல் வடஅரசு, தென் அரசு என இரண்டாக பிளவுபட்ட காலப்பகுதி

(1) கி.மு 900 – 828 (2) கி.மு 931 – 922 (3) கி.மு 950 – 900 (4) கி.மு 722 ற்குப் பின் (5) கி.மு 600 – 500

**(10)** இஸ்ராயேல் மக்கள் பபிலோனியாவில் அடிமைகளாக இருந்த காலம்

(1) 70 வருடங்கள் (2) 40 வருடங்கள் (3) 20 வருடங்கள் (4) 50 வருடங்கள் (5) 10 வருடங்கள்

**(11)** "யூதேயா மக்களின் தந்தை" என்னும் புகழ் பெற்றவர்

(1) எஸ்ரா (2) ஆபிரகாம் (3) யாக்கோபு (4) எசாயா (5) தாவீது

**(12)** புதிய ஏற்பாடு முதன்முதலில் எழுதப்பட்ட மொழி

(1) எபிரேயம் (2) கிரேக்கம் (3) அரமேயிக் (4) இலத்தீன் (5) வல்கேற்

**(13)** எருசலேமை முற்றுகையிட்டு பலத்தீனாவையும் கைப்பற்றி முழு நாட்டையும் உரோமைப் பேரரசின் கீழ் அடிமைப்படுத்தியர்

(1) தாவீது (2) அத்தனாசியார் (3) பொம்பே (4) கிரகோரி (5) யோசுவா

**(14)** ஐந்நூலில் நான்கு மரபுகள் தனித்தனியாக இருப்பதாகக் கூறியவர்

(1) தெர்துலியன் (2) தாகசில் றொபட் (3) ஐஸ்டின் (4) வேல்ஹவுசன் (5) பீற்றர்லெம்பட்

**(15)** குருமரபு ஆரம்பிக்கப்பட்ட இடம்

(1) யூதேயா (2) சமாரியா (3) எபேசு (4) சிக்கேம் (5) ஜெருசலேம்

**(16)** முதலாவது படைப்புக் கதையின்படி மூன்றாம் நாளுக்கு சமாந்தரமான எத்தனையாம் நாள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது

(1) நான்காம் நாள் (2) ஐந்தாம் நாள் (3) இரண்டாம் நாள் (4) ஆறாம் நாள் (5) முதலாம் நாள்

**(17)** "மண்ணால் உருவாக்கல்" வாழ்க்கையின் மறைபொருளான எதை அடையாளப்படுத்துகின்றது

(1) சுயஉருவத்தை (2) மனிதத்தை (3) அழிவை (4) சாயலை (5) அன்பை

**(18)** பெருவெள்ளப் பெருக்கிற்கு காரணமாக கூறப்படுவது

(1) மனிதனின் அறியாமை (2) மனிதனின் ஊழல்களே (3) மனிதனின் ஆசைகளே (4) மனிதனின் பொறாமையே (5) இறைவனின் இரக்கம்

**(19)** மனிதனால் நிறைவேற்ற முடியாதென நினைக்கின்ற காரியங்கள் இறைவனால் நிறைவேற்றப்படும் என விசுவசித்தவர்

(1) எசாயா (2) யாக்கோபு (3) ஈசாக் (4) தாவீது (5) ஆபிரகாம்

**(20)** துன்புறும் பணியாளன் என குறிப்பிடும் கிறிஸ்துவின் முன்னடையாளமாக காணப்பட்டது
(1) வெண்கலப் பாம்பு (2) எசாயா (3) ஈசாக்
(4) யாக்கோபு (5) திருமுழுக்கு யோவான்

**(21)** இஸ்ரயேலர் கலாசார ரீதியாக சொந்தம் கொண்டாடிய மக்கள் குழுவினர்
(1) சமாரியர் (2) பரிசேயர் (3) சதுசேயர்
(4) மறைநூல் அறிஞர் (5) ஹிக்சோஸியர்

**(22)** அந்நிய நாட்டவரைப் பற்றி மிகக் கொடூரமான **இன ஒழிப்புக் கொள்கையை** நடைமுறைப் படுத்திய ஆளுநன்
(1) முதலாம் ராமேசஸ் (2) எப்பிபானஸ் (3) புனித ஜெரோபாம்
(4) இரண்டாம் ராமேசஸ் (5) தூய போனிபஸ்

**(23)** பார்வோனின் முடியின் மீது இருந்த **"பாம்பின் சின்னம்"** என்பதன் அர்த்தம்
(1) எகிப்து வல்லரசு என்பது
(2) பார்வோன் படைகளின் தலைவன் என்பது
(3) எகிப்தின் வல்லமை தோற்கடிக்கப்படும் என்பது
(4) சகல வல்லமை கொண்ட பேரரசு அரசு என்பது
(5) எகிப்தின் உச்சநிலையை உணர்த்துகிறது என்பது

**(24)** "மாசா" என்னும் எபிரேயச் சொல்லின் பொருள்
(1) வாதாடுதல் (2) சோதித்தல் (3) சண்டைபிடித்தல்
(4) போராடுதல் (5) பாதுகாத்தல்

**(25)** மோசே சீனாய் மலை உச்சிக்கு இறைவனை சந்திக்கச் சென்றது
(1) இரு முறை (2) மூன்று முறை (3) எழுபது முறை
(4) நான்கு முறை (5) எட்டு முறை

**(26)** "மெசியா" என்னும் சொல் கிரேக்க மொழியில்
(1) மஷியா (2) அன்புக் கடவுள் (3) கிறிஸ்தோஸ்
(4) அபிசேகம் செய்யப்பட்டவர் (5) அனுப்பப்பட்டவர்

**(27)** "எரேமியா" என்ற பெயரின் அர்த்தம்
(1) யாவேயினால் மீட்புப்பெறல் (2) இறைவன் பலப்படுத்துகிறார்
(3) யாவே மீட்பராய் இருக்கிறார் (4) இறைவன் இரக்கமுள்ளவர்
(5) யாவே உயர்த்துகிறார்

**(28)** எசாயா 40 : 11ல் ஆயனாகவும், மந்தையாகவும் காட்டப்படுவது
(1) ஆபிரகாமையும் அவர் குடும்பத்தையும்
(2) மோசேயையும், இஸ்ராயேல் மக்களையும்
(3) யாக்கோபையும் பிள்ளைகளையும்
(4) இறைவனையும் இஸ்ராயேல் மக்களையும்
(5) பாப்பரசரையும் திருச்சபையையும்

**(29)** யூத மறையில் இறுதியாக உருவாகிய ஒரு குழுவினர்
(1) மறைநூல் அறிஞர் (2) சதுசேயர் (3) பரிசேயர்
(4) சமாரியர் (5) எஸ்சேனியர்

**(30)** கெத்சமனித் தோட்டத்தில் யேசுவைக் கைது செய்தபோது தப்பியோடிய இளைஞன் என விவிலிய ஆசிரியர்களால் குறிப்பிடப்படுபவர்
(1) யோவான் (2) மாற்கு (3) மத்தேயு
(4) பேதுரு (5) யாக்கோபு

**(31)** பின்வரும் கூற்றுக்கள் எந் நற்செய்தியாளரைக் குறிக்கின்றது

A - பவுலின் நெருங்கிய நண்பன்

B - ஒரு மருத்துவர்

C - வரலாற்று ஆசிரியர்

D - கிரேக்க மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்

(1) பவுல் (2) பேதுரு (3) லூக்கா
(4) மத்தேயு (5) மாற்கு

**(32)** விதைப்பவனின் உவமையின் கருத்துப்படி தீமையின் அடையாளமாக காட்டப்படுவது

(1) பறவைகள் (2) சாத்தான் (3) பாம்பு
(4) முட்புதர்கள் (5) பாறை நிலம்

**(33)** யோவானின் கண்ணோட்டத்தின்படி விண்ணரசைக் குறிக்கும் அடையாளங்கள்

(1) யேசுவின் போதனைகள்
(2) யேசுவின் மரணம்
(3) திருத்தூதர்
(4) திருச்சபை
(5) யேசுவின் புதுமைகள்

**(34)** "பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க முடியவில்லை" எனக் கூறியவர்

(1) படைவீரர் (2) தலைமைக் குருக்களும், பரிசேயரும்
(3) அவ்வழியே சென்றவர்கள் (4) யூதர்கள்
(5) நூற்றுவத் தலைவன்

**(35)** காலடிகளைக் கழுவும் சம்பவம் எந்த நற்செய்தியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது

(1) மத்தேயு (2) லூக்கா (3) மாற்கு
(4) யோவான் (5) திருத்தூதர் பணி

**(36)** யேசு இறந்து விட்டார் என்பதை உறுதி செய்வதற்கான சாட்சியாக உள்ளது?

(1) ஈட்டியால் விலாவில் குத்துதல்
(2) காவல் செய்தது
(3) ஏளனம் செய்தது
(4) ஆணி அறைந்தது
(5) காடியைக் கொடுத்தது

**(37)** தூய பவுல் 2வது தூதுரைப் பயணத்தின்போது **பிலிப்பியில்** இடம் பெற்ற சம்பவம் அல்லாதது

(1) லிதியாவின் மனமாற்றம்
(2) யுத்திக்கு என்னும் இளைஞனை உயிர்ப்பித்தது
(3) மந்திரம் கூறும் பெண்ணிடமிருந்து அசுத்த ஆவியை விரட்டுதல்
(4) பவுலும் சீலாவும் சிறையில் இடப்படல்
(5) பவுலும் சீலாவும் விடுதலை செய்யப்படல்

**(38)** "தூய பவுல் "இறையருளை" உணர்த்தப் பயன்படுத்திய கிரேக்க சொல்லான காரியுஸ் என்பதன் பொருள் என்ன?

(1) நிலையான நம்பிக்கை
(2) உண்மையான நம்பிக்கை
(3) இரக்கம்
(4) நேர்மையான கீழ்ப்படிதல்
(5) எப்போதும் பொறுமை

**(39)** திருச்சபையின் பொதுச்சங்கங்களில் முதற் சங்கமாக இருப்பது
(1) எபேசு பொதுச் சங்கம்
(2) திரிதெந்தின் பொதுச் சங்கம்
(3) நிசேயா பொதுச் சங்கம்
(4) எருசலேம் பொதுச்சங்கம்
(5) காத்தேச் பொதுச்சங்கம்

**(40)** தூய பவுல் ஆவியைக் குறிக்கப் பயன்படுத்தும் கிரேக்கச் சொல் எது
(1) கரிஸ்மா
(2) அகபே
(3) நபி
(4) ரூஆக்
(5) நெயூமா

**(41)** எபேசு பொதுச் சங்கம் கூட்டப்படுவதற்கு காரணமாக இருந்த பேதகம் எது?
(1) ஆரியுஸ் பேதகம்
(2) மணிக்கேய பேதகம்
(3) மசதோனியப் பேதகம்
(4) இயுத்திக்கஸ் பேதகம்
(5) நொஸ்தோரியப் பேதகம்

**(42)** மத்திய யுகத்தில் கிறிஸ்தவ சிற்பக் கலையைப் பயன்படுத்தியருப்பது
(1) ஆலயங்கள் கட்டிடங்களை அலங்கரிக்கும் ஒரு முறையாக
(2) கட்டிடக்கலையின் அபிவிருத்தியை முன்னிட்டு
(3) கலாசார மதிப்பீடுகள் வழியாக இறைவனை வழிபடுவதற்காக
(4) சிற்பக்கலையை அனுபவ ரீதியாக அறிவதற்காக
(5) ஆலயக் கட்டிடங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக

**(43)** திருத்தூதர் காலத்தில் பாவமன்னிப்புப் பெற மிகவும் தேவையான விடயம்
(1) பாவம் செய்வதில்லை என வாக்குப்பண்ணல்
(2) மனம் வருந்திப் பாவங்களை அறிக்கையிடுதல்
(3) தீமை செய்தோரிடத்தில் மன்னிப்புக் கேட்டல்
(4) அப்பம் பிட்கும் சடங்கில் கலந்துகொள்ளல்
(5) திருச்சட்டங்களை கடைப்பிடித்தல்

**(44)** ‘‘மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்குகின்ற வித்தாகும்’’ என்னும் பெறுமதி வாய்ந்த கூற்றை முன்வைத்தவர்
(1) தூய அத்தனாசியார்
(2) கொன்ஸ்சாந்தின் பேரரசன்
(3) தூய எயுசேபியுஸ்
(4) தூய தேர்த்தூலியன்
(5) அலெக்சாந்திரியாவின் ஆயர்

**(45)** புனித அவிலா தெரேசாள் எழுதிய இரு ஆன்மீக நூல்களாவன
(1) ‘‘உதயதாரகை’’ , ‘‘இருண்ட இரவு’’
(2) ‘‘ஆன்மீகப் பாடல்’’ , ‘‘இனிமைமிகு பாடல்’’
(3) ‘‘நிறைவாழ்வின் வழி’’ , உள்ளக மாளிகை’’
(4) ‘‘அன்பின் அணையாச் சுவாலை’’ , ‘‘ஆன்மீகப் பயிற்சி’’
(5) ‘‘இறைவனின் நகரம்’’ , ‘‘தன்னிலை ஏற்பு’’

**(46)** போர்த்துக்கேயர் காலத்தில் ஏற்பட்ட கத்தோலிக்கருக்கு எதிரான துன்புறுத்தல்களாவன
(1) தர்மபாலா அரசனின் துன்புறுத்தல்
(2) விதிய பண்டார துன்புறுத்தல், சங்கிலி அரசனின் கீழ் துன்புறுத்தல்
(3) ஜெயவீர பண்டாராவின் துன்புறுத்தல்
(4) கரலியட்ட பண்டாரவின் துன்புறுத்தல்
(5) வீரசுந்தர பண்டாராவின் துன்புறுத்தல்

**(47)** ஒல்லாந்தரின் காலத்தில் கத்தோலிக்கர் முகம்கொடுத்த மிகப் பெரிய துன்புறுத்தலானது
(1) குருக்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டமை
(2) கத்தோலிக்க பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டமை
(3) திருமுழுக்குப் பெறாதவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படாமை
(4) ஆன்மீக செயற்பாடுகளுக்கு குருக்கள் இல்லாதிருந்தமை
(5) சகல பாடசாலைகளிலும் புரட்டஸ்தாந்து மதம் கற்பிக்கப்பட்டமை

**(48)** இலங்கை மண்ணில் முதன்முதலாக ஆயர் அபிசேகம் பெற்றவர் யார்?
(1) மல்கம்ரஞ்சித்
(2) தோமஸ்மூர்
(3) ஓராஷியோ பட்டிகீன்
(4) பெட்டிக் ஓசானாம்
(5) இசபல் மரியா

**(49)** திருப்பலியில் இடம்பெறும் இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என்பன பெற்றுக் கொள்ளப்பட்டது
(1) யூத மரபில்
(2) கிரேக்க மரபில்
(3) உரோம மரபில்
(4) யாவே மரபில்
(5) குரு மரபில்

**(50)** 2003ம் ஆண்டு ஏப்ரல் 17ம் திகதி ''நற்கருணையின் புனிதத்துவம்'' என்னும் சுற்றுமடலை வெளியிட்ட திருத்தந்தை
(1) திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற்
(2) திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ்
(3) திருத்தந்தை இருபத்தி மூன்றாம் அருளப்பர் சின்னப்பர்
(4) திருத்தந்தை பத்தொன்பதாம் பத்தினாதர்
(5) திருத்தந்தை இரண்டாவது யோவான் பவுல்

(50 x 2 = 100 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

| | | |
|---|---|---|
| | **மாகாண கல்வித் திணைக்களம்**<br>**வடக்கு மாகாணம்**<br>**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)**<br>**மாதிரிப் பரீட்சை - 2017** | |

| | | |
|---|---|---|
| **தரம் : 13 (2017)** | **கிறிஸ்தவம் - II** | **நேரம் : 3.00 மணித்தியாலங்கள்** |

**அறிவுறுத்தல்**

❖ **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பகுதி - I**

*(01)* (i) பாவத்தின் விளைவாக சமத்துவ நிலை முறிவடைந்த விதத்தினை நான்கு காரணிகள் மூலம் எடுத்துக்காட்டுக.

(ii) இறைவன் வாக்குப் பண்ணிய மெசியா யேசு என்பதை எடுத்துக்காட்ட தூய மத்தேயு தமது நற்செய்திக்கு அடிப்படையாகக் கொண்ட நான்கு விடயங்களும் எவை?

(iii) தொடக்க நூலின்படி பாவம் பரவுதலை உதாரணங்கள் நான்கின் மூலம் எடுத்துக் காட்டுக.

(iv) உண்மை இறைவாக்கினரை இனம் காண்பதற்கான அளவு கோல்கள் நான்கு தருக.

(v) கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னர் பலஸ்தீனாவை அதிகாரத்திற்குள் வைத்திருந்த பேரரசுகள் நான்கையும் பெயரிடுக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

*(02)* (i) திருச்சபையின் மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான துறவற சபைகள் நான்கினைப் பெயரிடுக.

(ii) இணைச்சட்ட மரபின் சிறப்பம்சங்கள் நான்கு தருக.

(iii) ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மறைத்தூதுக்குழுவினர் நான்கு தருக.

(iv) போர்த்துக்கேயர் காலத்தில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய அரச பிள்ளைகள் நால்வரைத் தருக.

(v) மோசயிக் சித்திரக்கலையின் பண்புகள் நான்கு தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

*(03)* (i) மாற்கு நற்செய்திக்கு ஏற்ப சிலுவை மரணத்திற்குத் தீர்ப்புப் பெற்றிருந்த யேசுவை ஏளனம் செய்து அவமதித்தவர்கள் நால்வரைத் தருக.

(ii) கத்தோலிக்க இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கிய யாக்கோமே கொன்சால்வே எழுதிய முக்கிய நூல்கள் நான்கு தருக.

(iii) திரிதெந்தின் பொதுச்சங்கத்தில் முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சித் திட்டங்கள் நான்கு எழுதுக.

(iv) ஒல்லாந்தர் காலத்தில் இருந்த நான்கு விதமான பாடசாலைகளையும் தருக.

(v) பத்றோஆடோ திட்டத்திற்கமைய திருச்சபையின் ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் நான்கு எழுதுக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

***(04)*** (i) குலமுதுவர் ஆபிரகாம் தமது வாழ்க்கைச் சவால்களுக்கு முகம் கொடுத்த விதம் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சவாலாகும் என்பதை ஐந்து உதாரணங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) "சீனாய் உடன்படிக்கையின் குறிக்கோள்" இன்றைய சமுதாயத்தினை கட்டியெழுப்ப எவ்வளவு தூரம் உதவும் என்பதை 100 சொற்கள் அளவில் எழுதுக.

(10 புள்ளிகள்)

***(05)*** (i) ஒத்தமை நற்செய்திகளுக்கிடையில் காணப்படும் வேற்றுமைகள் ஐந்தை தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஒத்தமை நற்செய்தியில் காணப்படும் வேற்றுமைகளுக்கான காரணங்கள் ஐந்தை தந்து 100 சொற்களுக்கு குறையாமல் விளக்குக.

(10 புள்ளிகள்)

***(06)*** (i) ஒல்லாந்தர் காலக்கல்வி எமது நாட்டில் வளர்ச்சியடைந்த விதத்தினை ஐந்து காரணிகளின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) யோசப்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக்கொள்கைகள் 5 தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

***(07)*** (i) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி புனித பவுல் 1 தெசலோனிக்கர் 5 : 1 – 11ல் கூறும் கருத்துக்களை கூறி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்து இவ்வுலகிற்கு ஏன் மனித அவதாரம் எடுத்து வந்தார் என்பதனை உம் வகுப்பு வேற்று மத மாணவன் ஒருவருக்கு எவ்வாறு எடுத்துக் கூறுவீர்?

(10 புள்ளிகள்)

***(08)*** (i) 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் வெளியீடுகளில் திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டின் படிப்பினைகளை ஐந்து காரணிகளின் துணையுடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ii) மனிதனின் மாண்பையும் அந்த மாண்பினைப் பேணும் முறையையும் பற்றி 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் "இன்றைய உலகில் திருச்சபை" என்னும் கொள்கைத்திரட்டு எடுத்துக்கூறும் விடயங்கள் ஐந்தினை விபரிக்குக.

(10 புள்ளிகள்)